Ours bank with
Bank of Baroda

# மதுரை மணி

தினசரி தமிழ் நாளிதழ் ®

Madurai Mani Tamil Evening Daily

ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)
2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
Annameenakshi Restaurant (Veg.)
2, Town Hall Road,
Madurai-625 001.

மதுரை பதிப்பு *மணி 55 * ஓசை 214 உள்ளூர் - 02.08.2026 ஞாயிற்றுக்கிழமை விலை ரூ.4/- பக்கங்கள்-4 Website : http://maduraimaninews.com

Madurai Edition *Vol 55 * Issue 214 வெளியூர் - 03.08.2026 திங்கட்கிழமை Price Rs. 4/- Pages -4 Email: maduraimaninews@gmail.com

செல்வம் சேர 12 ராசிக்காரர்களுக்கு பரிகாரங்கள்!

மத்திய அரசு (ITAT) ல் 42 நிரந்தர பணியிடங்கள்!

பிஎப் உறுப்பினர்களுக்கு சூப்பர் அறிவிப்பு!

பிரபல நடிகையை கரம் பிடிக்கும் பேச்சாளர்?

## ஈரான் மீது தாக்குதல் ரத்து: டிரம்ப்!



வாஷிங்டன், ஆக. 02–

ஜோர்டான் நாட்டில் உள்ள அமெரிக்க ராணுவ தளத்தின் மீது ஈரான் தாக்குதல் நடத்தியது. இதனை தொடர்ந்து, ஈரான் மீது இந்த வார இறுதியில் தாக்குதல் நடத்தும்படி, அமெரிக்க ஜனாதிபதி டொனால்டு டிரம்ப் உத்தரவிட்டு உள்ளார் என்ற அதிர்ச்சி தகவல் வெளியானது.

ஈரானை தங்களிடம் சரண் அடைய வைக்கும் நோக்கில் இந்த ராணுவ நடவடிக்கை இருக்கும் என கூறப்பட்டது. இதனால், மேற்காசிய பகுதிகளில் மீண்டும் பரபரப்பு ஏற்பட்டது. ஈரானின் எரிசக்தி கட்டமைப்புகளான மின்சார நிலையங்கள், பெட்ரோலியம் சுத்திகரிப்பு நிலையங்கள் போன்றவற்றின் மீது தாக்குதல் நடத்த அமெரிக்கா திட்டமிட்டு உள்ளது என்றும் தகவல் வெளியானது.

இந்த நிலையில், ஈரான் மீது நடத்த இருந்த தாக்குதல் ரத்து செய்யப்படுகிறது. மத்திய கிழக்கு நாடுகளின் வேண்டுகோளுக்கு ஏற்ப இந்த முடிவு எடுக்கப்பட்டு உள்ளது என டிரம்ப் அறிவித்து உள்ளார். இதனால், ஈரானுடன் விரைவில் ஒப்பந்தம் ஒன்று ஏற்படுத்தப்படும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்து உள்ளார். இதனால், உடனடியாக, ஒட்டுமொத்த அளவில் ஹார்மூஸ் ஜலசந்தி திறக்கப்படுவதுடன், ஈரானின் அணு ஆயுத அச்சுறுத்தலும் முடிவுக்கு வரும் என்று உறுதியாக கூறினார். எங்களுடன், இந்த போர் நிறுத்தத்தில் இஸ்ரேல் நாடும் இணைந்துள்ளது என்றார். இதனால், ஈரானுக்கு எதிராக அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் ஆகிய இரு நாடுகளும் தாக்குதலை நிறுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## தமிழகத்தின் பார்வை. சட்டப்பேரவை மீது!

சென்னை, ஆக. 02–

முதலமைச்சர் விஜய் தலைமையிலான தமிழக அரசின் முதல் முழுமையான பட்ஜெட் ஆகஸ்ட் 5–ம் தேதி சட்டப்பேரவையில் தாக்கல் செய்யப்படுகிறது. இதையடுத்து ஆகஸ்ட் 6–ம் தேதி வேளாண் பட்ஜெட் தாக்கல் செய்யப்பட உள்ளது. தேர்தல் காரணமாக கடந்த ஆட்சியில் இடைக்கால பட்ஜெட் மட்டுமே தாக்கல் செய்யப்பட்ட நிலையில், புதிய அரசின் முதல் முழு பட்ஜெட் என்பதால் மக்கள் மத்தியில் பெரும் எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது. நிதியமைச்சர் மரிய வில்சன் 2026–27–ம் ஆண்டுக்கான பட்ஜெட்டை காலை 10 மணிக்கு தாக்கல் செய்ய உள்ளார்.




அதன்பின் பட்ஜெட் மீதான விவாதம், அமைச்சர்களின் பதிலுரை மற்றும் துறைவாரியான மானியக் கோரிக்கைகள் குறித்து சட்டப்பேரவையில் ஆலோசிக்கப்படும்.

தேர்தல் அறிக்கையில் அறிவிக்கப்பட்ட பெண்களுக்கு மாதம் ரூ.2,500, அனைத்து பேருந்துகளிலும் இலவச பயணம், 'அண்ணன் சீர்' திட்டம், வேலைவாய்ப்பு உருவாக்கம், தொழில் முதலீடுகள், ஏஐ (AI) நகரம், அனைத்து மாவட்டங்களிலும் வேலைவாய்ப்பு திட்டங்கள் உள்ளிட்ட முக்கிய அறிவிப்புகள் இடம்பெறுமா என்ற எதிர்பார்ப்பு நிலவுகிறது.

மேலும், வேளாண் பட்ஜெட்டில் எல் நினோ பாதிப்பில் இருந்து விவசாயிகளை பாதுகாக்கும் புதிய திட்டங்கள் அறிவி க்கப்படலாம் என கூறப்படுகிறது.

விஜய் அரசின் முதல் பட்ஜெட் என்பதால், இது அரசின் செயல்திறனை மதிப்பிடும் முக்கிய சோதனையாக பார்க்கப்படுகிறது.



காவிரி விவகாரம் தொடர்பாக கர்நாடகாவில் அனைத்துக்கட்சி கூட்டம் நடந்தது. கூட்டத்தில் முன்னாள் முதல்வர்கள் சித்தராமையா, எடியுரப்பா, குமாரசாமி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## ஐயுஎம்எல் தேசியத் தலைவர் காதர் மொகிதீன் மகன் மறைவுக்கு முதலமைச்சர் விஜய் இரங்கல்



சென்னை, ஆக. 02–

தமிழக முதலமைச்சர் விஜய் வெளியிட்டுள்ள எக்ஸ் பக்க பதிவில் கூறியிருப்பதாவது:–

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் தேசியத் தலைவர் பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீனின் மூத்த மகன் மருத்துவர் கே.எம்.கே. கலீலூர் ரஹ்மான் உடல்நலக்குறைவு காரணமாக காலமானார் என்ற செய்தியறிந்து மிகுந்த துயரமும், மன வேதனையும் அடைந்தேன்.

தனது அன்பு மகனை இழந்து தவிக்கும் பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீன் அவர்களுக்கும், அவரது குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் இயக்கத்தின் தோழர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதலமைச்சர் விஜய் எக்ஸ் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.

## சபரிமலை பயணத்தை பக்தர்கள் தவிர்க்க வேண்டும்: திருவிதாங்கூர் தேவஸ்தானம் வேண்டுகோள்!




சபரிமலை, ஆக. 02–

பம்பை ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதால் சபரிமலை பயணத்தை பக்தர்கள் தவிர்க்க வேண்டும் என திருவிதாங்கூர் தேவஸ்தானம் வேண்டுகோள்விடுத்துள்ளது. கேரளாவில் பெய்து வரும் கனமழையால் பல இடங்களில் வெள்ளம் சூழ்ந்து மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

## இ.எம்.ஐ.

# ஏறுமா? இறங்குமா? கோடிக்கணக்கான கண்கள்

## ஆர்.பி.ஐ. மீது..!




மும்பை, ஆக. 02–

இந்திய ரிசர்வ் வங்கியின் (RBI) நிதிக் கொள்கைக் குழு (MPC) கூட்டம் நாளை தொடங்கி ஆகஸ்ட் 5 வரை நடைபெறுகிறது. ரிசர்வ் வங்கி ஆளுநர் சஞ்சய் மல்கோத்ரா தலைமையில் நடைபெறும் இந்தக் கூட்டத்தில் எடுக்கப்படும் முடிவு கள், வீட்டு கடன், வாகன கடன், தனிநபர் கடன், நிலையான வைப்பு (FD) வட்டி உள்ளிட்ட பல்வேறு நிதி அம்சங்களில் நேரடி தாக்கத்தை ஏற்படுத்தும்.

கூட்டத்தின் இறுதிநாளான ஆகஸ்ட் 5 அன்று ரெப்போ வட்டி விகிதம் தொடர்பான அறிவிப்பை ரிசர்வ் வங்கி வெளியிட உள்ளது. தற்போதைய பணவீக்கம், நாட்டின் பொருளாதார வளர்ச்சி, ரூபாய் மதிப்பு, உலகளாவிய பொருளாதார சூழல் மற்றும் பணப்புழக்கம் உள்ளிட்ட காரணிகளை ஆய்வு செய்தே இந்த முடிவு எடுக்கப்படும்.

வங்கிகள் ரிசர்வ் வங்கியிடம் இருந்து குறுகிய காலத்திற்கு கடன் பெறும்போது செலுத்தும் வட்டியே ரெப்போ வட்டி விகிதம் ஆகும். இந்த விகிதமே வங்கிகள் வாடிக்கையாளர்களுக்கு வழங்கும் வீட்டு கடன், வாகன கடன் மற்றும் தனிநபர் கடன்களின் வட்டியை நிர்ணயிப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது.

ரெப்போ வட்டி உயர்த்தப்பட்டால், வங்கிகளின் கடன் செலவு அதிகரிப்பதால் கடன் வட்டியும் உயரும். இதன் காரணமாக EMI தொகை அதிகரிக்கலாம். அதேபோல் ரெப்போ வட்டி குறைக்கப்பட்டால் கடன் வட்டியும் குறைந்து, மாதாந்திர EMI சுமை குறையும்.

இந்தியாவில் பெரும்பாலான வீட்டு மற்றும் வாகனக் கடன்கள் Floating Rate முறையில் வழங்கப்படுவதால், ரிசர்வ் வங்கியின் வட்டி மாற்றம் நேரடியாக கடனாளிகளை பாதிக்கும். அதேநேரத்தில், ரெப்போ வட்டி மாற்றம் நிலையான வைப்புத் தொகை (FD) வட்டிகளிலும் தாக்கத்தை ஏற்படுத்தும்.

பொருளாதார நிபுணர்களின் கணிப்பின்படி, இந்த முறை ரெப்போ வட்டி விகிதத்தில் மாற்றம் செய்யப்படாமல் தற்போதைய நிலையே தொடர அதிக வாய்ப்புள்ளது. அண்மையில் அமெரிக்க மத்திய வங்கியும் வட்டி விகிதத்தில் மாற்றம் செய்யாத நிலையில், இந்திய ரிசர்வ் வங்கியும் அதே நிலைப்பாட்டை பின்பற்றலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

எனவே, ஆகஸ்ட் 5–ம் தேதி வெளியாகும் ரிசர்வ் வங்கியின் அறிவிப்பு, கோடிக்கணக்கான வீட்டு கடன், வாகன கடன் மற்றும் தனிநபர் கடன் பெற்றவர்களுக்கு மிகவும் முக்கியமானதாக இருக்கும். EMI உயரும் அல்லது மாறாமல் நீடிக்கும் என்ற எதிர்பார்ப்பில் வங்கித் துறையும், கடனாளர்களும் காத்திருக்கின்றனர்.

## ஆடிப்பெருக்கில் செல்வம் பெருக வாங்க வேண்டிய 3 மங்களப் பொருட்கள்..!!

ஆடிப்பெருக்கில் செல்வம் பெருக வாங்க வேண்டிய 3 மங்களப் பொருட்கள்..! மாலை 6 மணிக்குள் மறக்காமல் வாங்குங்கள்




ஆடிப்பெருக்கு:

தமிழ் மாதமான ஆடியின் 18–ஆம் நாளான ஆடிப்பெருக்கு தமிழகம் முழுவதும் பக்தி மற்றும் உற்சாகத்துடன் கொண்டாடப்படுகிறது. விவசாயத்தின் உயிர்நாடியான ஆறுகள், குளங்கள் உள்ளிட்ட நீர்நிலைகளுக்கு நன்றி செலுத்தும் நாளாக இது பல தலைமுறைகளாக போற்றப்படுகிறது.

பழமையான மரபுப்படி, ஆடிப்பெருக்கன்று அனைத்து நீர்நிலைகளையும் காவிரி தாயாக கருதி ஆற்றங்கரைகளில் சிறப்பு பூஜைகள் நடத்தப்படுகின்றன. 'பெருக்கு' என்ற சொல்லுக்கேற்ப, இந்நாளில் செய்யும் வழிபாடுகள், தானங்கள், வாங்கும் பொருட்கள் மற்றும் தொடங்கும் சுபகாரியங்கள் பல மடங்கு வளர்ச்சி தரும் என்பது நம்பிக்கையாக உள்ளது.

இதனால் தங்கம், வெள்ளி, புதிய வாகனம், சொத்து வாங்குதல், புதிய தொழில் மற்றும் சுபகாரியங்களை தொடங்குவது போன்றவற்றை பலர் இந்த நாளில் மேற்கொள்கின்றனர்.

மாலை 6 மணிக்குள் வாங்க வேண்டிய 3 மங்களப் பொருட்கள்

விலை உயர்ந்த பொருட்களை வாங்க முடியாதவர்கள் கவலைப்பட தேவையில்லை. ஆன்மீக நம்பிக்கையின்படி, மாலை 6 மணிக்குள் கீழ்க்கண்ட மூன்று பொருட்களை வாங்கி பூஜை அறையில் வைத்து வழிபட்டால் மகாலட்சுமியின் அருள் கிடைக்கும் என கூறப்படுகிறது.

கல் உப்பு

விரலி மஞ்சள்

துவரம் பருப்பு

வழிபாட்டுக்குப் பிறகு, இந்த பொருட்களை தினசரி சமையலில் பயன்படுத்தலாம்.

மேலும் வாங்கலாம்...

ஆடிப்பெருக்கன்று கீழ்க்கண்ட மங்களப் பொருட்களையும் வாங்குவது சிறப்பாக கருதப்படுகிறது.

அரிசி

குங்குமம்

மாங்கல்யச் சரடு

பச்சை கற்பூரம்

கண்ணாடி

அதேபோல், திருமண பத்திரிகை அச்சடிக்க கொடுப்பது, புதிய வீடு கட்டுமானத்தை தொடங்குவது போன்ற மங்களகரமான செயல்களையும் இந்த நாளில் தொடங்குவது நற்பலன்களை அளிக்கும் என ஆன்மீக மரபுகள் கூறுகின்றன.

## தலையங்கம்


மதுரை மணி

ஞாயிற்றுக்கிழமை 02.08.2026

விசுவாவசு தமிழ் வருடம்

ஆடி மாதம் 17-ம் தேதி

## தங்கம் காத்த தேசம்... மறக்கக் கூடாத 1991 பாடம்!



1991–ஆம் ஆண்டு இந்தியா சுதந்திரத்திற்குப் பிறகு சந்தித்த மிகப் பெரிய பொருளாதார நெருக்கடியின் விளிம்பில் நின்றது. அந்நியச் செலாவணி கையிருப்பு சில வார இறக்குமதிக்கே போதுமான அளவுக்கு குறைந்ததால், நாடு திவாலாகும் அபாயம் ஏற்பட்டது. அந்த அவசர சூழலில், மத்திய அரசு 20 டன் மற்றும் பின்னர் 46.91 டன் தங்கத்தை வெளிநாட்டு வங்கிகளில் அடமானம் வைத்து அவசர நிதியை திரட்டியது. அந்த முடிவே இந்திய பொருளாதாரத்திற்கு மீண்டும் சுவாசம் கொடுத்தது.

அதன்பிறகு மேற்கொள்ளப்பட்ட பொருளாதார சீர்திருத்தங்கள் இந்தியாவின் வளர்ச்சிப் பாதையை முழுமையாக மாற்றின. வெளிநாட்டு முதலீடுகளுக்கு கதவுகள் திறக்கப்பட்டன; 'லைசென்ஸ் ராஜ்' முறைக்கு முடிவு கட்டப்பட்டது. அதன் பலனாக இன்று உலகின் முக்கிய பொருளாதார நாடுகளில் ஒன்றாக இந்தியா உயர்ந்துள்ளது.

1991 சம்பவம் ஒரு வரலாற்றுப் பதிவு மட்டுமல்ல; பொருளாதார ஒழுக்கம், அன்னியச் செலாவணி கையிருப்பின் அவசியம் மற்றும் தங்கத்தின் மூலோபாய முக்கியத்துவத்தை உணர்த்திய பாடமாகும். இன்று இந்தியா வலுவான அன்னியச் செலாவணி மற்றும் தங்கக் கையிருப்புடன் இருந்தாலும், அந்த நெருக்கடியின் அனுபவம் எதிர்கால பொருளாதார முடிவுகளுக்கு வழிகாட்டியாகவே உள்ளது. தங்கம் அன்றைய இந்தியாவை காப்பாற்றியது; ஆனால் நீண்டகால வளர்ச்சியை உறுதி செய்தது துணிச்சலான சீர்திருத்தங்கள்தான்.

## 'வி த லீடர்ஸ்' இயக்கம் சார்பில் கடற்கரை தூய்மைப் பணி: அண்ணாமலை தொடங்கி வைத்தார்!

சென்னை, ஆக. 02–

'வி த லீடர்ஸ்' (We The Leaders) அமைப்பின் சார்பில் தமிழகம் முழுவதும் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு சமூக விழிப்புணர்வு நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக, 'கடற்கரை தூய்மை இயக்கம்' கன்னியாகுமரி கடற்கரைச் சாலையில் அதிகாரப்பூர்வமாகத் தொடங்கி வைக்கப்பட்டது. இப்பணியை 'வி த லீடர்ஸ்' அமைப்பின் தலைவர் கே.அண்ணாமலை நேரில் பங்கேற்றுத் தொடங்கி வைத்தார்.



கன்னியாகுமரி தொடங்கி திருநெல்வேலியின் உவரி, தூத்துக்குடி மாவட்டத்தின் மணப்பாடு மற்றும் திருச்செந்தூர் ஆகிய கடலோரப் பகுதிகளில் இந்தத் தூய்மைப் பிரசார இயக்கம் தொடர்ந்து தீவிரமாக நடைபெறவுள்ளது. கடற்கரைப் பகுதிகளில் குவியும் பிளாஸ்டிக் கழிவுகள் மற்றும் பிற குப்பைகளை அகற்றி, கடலோரச் சூழலையும் கடல்வாழ் உயிரினங்களையும் பாதுகாக்கும் நோக்கில் இந்த இயக்கம் தொடங்கப்பட்டுள்ளது.

இந்தத் தூய்மைப் பணியில் 'வி த லீடர்ஸ்' அமைப்பின் தன்னார்வலர்கள், இளைஞர்கள், பொதுமக்கள் மற்றும் உள்ளூர் மீனவச் சமூகத்தினர் திரளாகக் கலந்துகொண்டு கடற்கரையைத் தூய்மைப்படுத்தும் பணியில் ஈடுபட்டனர். தூய்மைப் பணியைத் தொடர்ந்து, அப்பகுதி மீனவர்கள் மற்றும் உள்ளூர் மக்களுடன் அண்ணாமலை கலந்துரையாடி அவர்களின் கோரிக்கைகளையும் வாழ்வாதாரச் சவால்களையும் கேட்டறிந்தார்.

'வி த லீடர்ஸ்' இயக்கம் தொடங்கப்பட்டதிலிருந்து, போதைப்பொருள் ஒழிப்பு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, பெண்கள் பாதுகாப்பு, இளைஞர்களுக்கான திறன் பயிற்சி போன்ற ஆறு முக்கிய தலைப்புகளில் மக்கள் சார்ந்த களப்பணிகளை முன்னெடுத்து வருகிறது.

அதன் தொடர்ச்சியாக, இம்மாதம் சுற்றுச்சூழல் மற்றும் கடலோரப் பாதுகாப்பை வலியுறுத்தி இந்த மாநிலத் தழுவிய கடற்கரை தூய்மை இயக்கம் தொடங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## செல்வம் சேர 12 ராசிக்காரர்களுக்கு ஆன்மிக பரிகாரங்கள்!






வாழ்க்கையில் செல்வம் சேரவும், வீண் செலவுகள் குறையவும் ஒவ்வொரு ராசிக்காரர்களும் தங்களுக்கான ஆன்மிக பரிகாரங்களை நம்பிக்கையுடன் செய்யலாம் என ஜோதிடத்தில் கூறப்படுகிறது.

**மேஷம்:** வீட்டின் தென்பகுதியில் வெல்லம் வைத்து, செவ்வாய்க்கிழமை சிவனுக்கு கடலைப்பருப்பு நிவேதனம்.

**ரிஷபம்:** தினமும் பசுமாட்டிற்கு அகத்திக்கீரை அல்லது வாழைப்பழம் வழங்குதல்.

**மிதுனம்:** புதன்கிழமை புதன் பகவானுக்கு பச்சைப்பயிறு நிவேதனம்; ஏழை சுமங்கலிகளுக்கு மங்கலப் பொருட்கள் தானம்.

**கடகம்:** திங்களன்று சிவலிங்க அபிஷேகத்திற்கு பால் தானம்; பறவைகளுக்கு உணவு, தண்ணீர் வழங்குதல்.

**சிம்மம்:** இரவில் செம்புப் பாத்திரத்தில் வைத்த நீரை மறுநாள் வீட்டின் கிழக்குப் பகுதியில் தெளித்தல்.

**கன்னி:** புதன்கிழமை தானியம், வெல்லம் தானம்; பச்சை நிற ஆடை அல்லது பொருள் பயன்படுத்துதல்.

**துலாம்:** வெள்ளிக்கிழமை சிவாலயத்தில் பால், அரிசி தானம்; ஏழைக் குழந்தைகளுக்கு பால் வழங்குதல்.

**விருச்சிகம்:** சிவப்பு துணியில் பார்லி அரிசி வைத்து தென்கிழக்கில் வைப்பது; செவ்வாயன்று முருகன் வழிபாடு.

**தனுசு:** வெள்ளிக்கிழமை விஷ்ணு சஹஸ்ரநாமம் பாராயணம்; மஞ்சள் நிற ஆடை அல்லது கைக்குட்டை பயன்படுத்துதல்.

**மகரம்:** துளசி செடிக்கு தீபம் ஏற்றி வழிபாடு; சனிக்கிழமை கருப்பு/கருநீல ஆடை தானம்.

**கும்பம்:** வீட்டின் தென்மேற்கு பகுதியை சுத்தமாக வைத்தல்; சனிக்கிழமை எள் எண்ணெய் விளக்கு ஏற்றி சனி வழிபாடு.

**மீனம்:** வியாழக்கிழமை குரு பகவான் வழிபாடு; மஞ்சள், லட்டு நிவேதனம் மற்றும் கொண்டைக்கடலை தானம்.

இந்த பரிகாரங்களை பக்தியுடன் தொடர்ந்து செய்து வந்தால், பொருளாதார முன்னேற்றமும் செல்வ வளமும் அதிகரிக்கும் என நம்பப்படுகிறது.

## பிஎப் உறுப்பினர்களுக்கு சூப்பர் அறிவிப்பு!

புதுடெல்லி, ஆக. 02–

ஊழியர் வருங்கால வைப்பு நிதி அமைப்பு (EPFO) உறுப்பினர்களுக்கு மகிழ்ச்சியான அறிவிப்பை வெளியிட்டுள்ளது. இனி PF தொகையை திரும்பப் பெற விண்ணப்பிக்கும் உறுப்பினர்களின் கோரிக்கைகள் அதே நாளிலோ அல்லது அதிகபட்சம் 24 முதல் 48 மணி நேரத்திற்குள் செயல்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.




தொழில்துறை உச்சி மாநாட்டில் பேசிய மத்திய வருங்கால வைப்பு நிதி ஆணையர் கிருஷ்ணமூர்த்தி, EPFO–வின் டிஜிட்டல் கட்டமைப்பு மேம்படுத்தப்பட்டு வருவதால், 90% PF விண்ணப்பங்கள் தானியங்கி (Auto Settlement) முறையில் விரைவாக தீர்வு காணப்படும் என்றார்.

இதுவரை KYC விவரங்கள் சரியாக இருந்தாலும் PF தொகை கிடைக்க 7 முதல் 10 நாட்கள் வரை காத்திருக்க வேண்டிய நிலை இருந்தது. புதிய நடைமுறையால் அந்த காலதாமதம் வெகுவாக குறையும். மேலும், கணக்கு செயல்படுத்துதல் உள்ளிட்ட சேவைகளும் விரைவாக வழங்கப்படும்.

அடுத்த ஒரு மாதத்திற்குள் BHIM UPI மூலம் PF தொகையை நேரடியாக வங்கி கணக்கில் பெறும் வசதியும் அறிமுகப்படுத்தப்பட உள்ளது. இதன்மூலம் உறுப்பினர்கள் சில கிளிக்குகளிலேயே PF பணத்தை எளிதாகப் பெற முடியும்.

தற்போது EPFO உறுப்பினர்களுக்கு 8.25% வட்டி வழங்கப்பட்டு வருகிறது. வட்டி உயர்வு குறித்து தற்போது எதுவும் கூற முடியாது என கிருஷ்ணமூர்த்தி தெரிவித்தார். மேலும், 34 கோடிக்கும் அதிகமான உறுப்பினர்களின் கணக்குகளில் 8.25% வட்டி வரவு வைக்கப்பட்டுள்ளதுடன், ரூ.1.44 லட்சம் கோடி வட்டி வழங்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

## நீட் தேர்வை எதிர்த்துப் போராடிய மாணவர்கள் மீதான வழக்குகள் ரத்து; அமைச்சர் ராஜ்மோகன்!

சென்னை, ஆக. 02–

நீட் தேர்வை எதிர்த்துப் போராடிய மாணவர்கள் மீது பதிவுசெய்யப்பட்ட அனைத்து வழக்குகளும் ரத்து செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் ராஜ்மோகன் அறிவித்துள்ளார்.




நீட் வினாத்தாள் கசிவு மற்றும் முறைகேடுகளைக் கண்டித்து தமிழகத்தில் மாணவர்கள் மற்றும் அமைப்பினர் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டனர். சென்னையில் சாலை மறியல் மற்றும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட 50க்கும் மேற்பட்ட மாணவர்கள் மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் போலீசாரால் கைது செய்யப்பட்டு பிறகு விடுவிக்கப்பட்டனர்.

மாணவர்கள் மீது போலீசார் வழக்குப்பதிவு செய்தனர். இந்த சம்பவத்திற்கு கடும் எதிர்ப்பு கிளம்பியது. அறவழியில் போராடிய மாணவர்கள் மீது கடுமையான நடவடிக்கைகளை எடுப்பதாக என கேள்வி எழுப்பப்பட்டது. தற்போது மாணவர்கள் மீதான வழக்குகள் ரத்து செய்யப்பட்டது.

இது குறித்து அமைச்சர் ராஜ்மோகன் வெளியிட்டுள்ள பதிவில், " தமிழக முதல்வர் விஜயின் உத்தரவின்படி, நீட் தேர்வை எதிர்த்துப் போராடிய மாணவர்கள் மீது பதிவுசெய்யப்பட்ட அனைத்து வழக்குகளும் ரத்து செய்யப்படுகின்றன. இதர விவரங்கள் விரைவில் வெளியிடப்படும். முதல்வர் விஜய்க்கு மனமார்ந்த நன்றி" என குறிப்பிட்டுள்ளார்.

## பூமியில் விழும் டன் கணக்கான விண்வெளிக் குப்பைகள்..!!



ராக்கெட் மற்றும் செயற்கைக்கோள் ஏவுதல்கள் அதிகரித்து வருவதால், வாரத்திற்குச் சராசரியாக 1 மெட்ரிக் டன் எடையுள்ள விண்வெளிக் குப்பைகள் பூமியில் விழுவதாக விஞ்ஞானிகள் மதிப்பிட்டுள்ளனர். கென்யா, அமெரிக்கா, போலந்து எனப் பல நாடுகளில் ராக்கெட் பாகங்கள் விழுந்து பாதிப்பை ஏற்படுத்தி இருப்பதாகவும், 2035க்குள் உயிரிழப்புகள் நேரிடும் அளவுக்கு ஆபத்து அதிகரிக்கும் எனவும் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

## ஆடிப்பெருக்கை முன்னிட்டு வாழைத்தார் விலை உயர்வு!

நாமக்கல், ஆக. 02–

ஆடிப்பெருக்கை முன்னிட்டு இன்று நடை பெற்ற ஏலத்தில் பூவன் வாழைத்தார் ஒன்று அதிகபட்சமாக ரூ.550–க்கும், பச்சைநாடன் வாழைத்தார் ஒன்று ரூ.450–க்கும். ரஸ்தாளி வாழைத்தார் ஒன்று ரூ.450–க்கும், கற்பூரவள்ளி வாழைத்தார் ஒன்று ரூ.500–க்கும், மொந்தன் வாழைக்காய் ஒன்று ரூ.7–க்கும், செவ்வாழை ஒரு காய் ஒன்று ரூ.10–க்கும் ஏலம் போனது. வாழைத்தார்கள் விலை உயர்ந்துள்ளதால் வாழை பயிர் செய்துள்ள விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## NEET-UG 2026: கலந்தாய்வு அட்டவணை வெளியீடு!

புதுடெல்லி, ஆக. 02–

மருத்துவ இளநிலை (MBBS, BDS உள்ளிட்ட) படிப்புகளுக்கான NEET–UG 2026 கலந்தாய்வு (Counselling) அட்டவணையை மருத்துவ கலந்தாய்வு குழு (MCC) வெளியிட்டுள்ளது. அகில இந்திய ஒதுக்கீடு (AIQ), மத்திய பல்கலைக்கழகங்கள், டீம்டு பல்கலைக்கழகங்கள் மற்றும் மாநில ஒதுக்கீட்டு இடங்களுக்கான முக்கிய தேதிகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

NEET–UG 2026 கலந்தாய்வு முக்கிய அட்டவணை

| கட்டம் | அகில இந்திய ஒதுக்கீடு (AIQ) | | மாநில ஒதுக்கீடு | |
|---|---|---|---|---|
| முதல் சுற்று கலந்தாய்வு | ஆகஸ்ட் 4 | ஆகஸ்ட் 17 | ஆகஸ்ட் 13 | ஆகஸ்ட் 22 |
| சேர கடைசி நாள் | ஆகஸ்ட் 22 | | ஆகஸ்ட் 28 | |
| 2–வது சுற்று | ஆகஸ்ட் 24 | செப். 2 | ஆகஸ்ட் 31 | செப். 8 |
| சேர கடைசி நாள் | செப். 8 | | செப். 14 | |
| 3–வது சுற்று | செப். 10 | செப். 18 | செப். 16 | செப். 26 |
| சேர கடைசி நாள் | செப். 26 | | அக். 1 | |
| Stray Vacancy சுற்று | செப். 28 | அக். 3 | அக். 3 | அக். 5 |
| இறுதி சேர்க்கை நாள் | அக். 10 | | அக். 10 | |

**முக்கிய விவரங்கள்**

ஆகஸ்ட் 23: MCC–க்கு சேர்ந்த மாணவர்களின் விவரங்கள் சரிபார்ப்பு.

செப்டம்பர் 9: 2–வது சுற்றுக்கான சேர்ந்த மாணவர் விவரங்கள் சரிபார்ப்பு.

செப்டம்பர் 27: 3–வது சுற்றுக்கான சேர்ந்த மாணவர் விவரங்கள் சரிபார்ப்பு.

அக்டோபர் 3: Stray Vacancy சுற்றுக்கு ஒதுக்கப்பட்ட மாணவர் விவரங்களை MCC பகிர்வு.

UG மருத்துவப் படிப்புகளுக்கான கல்வியாண்டு தொடக்கம்: செப்டம்பர் 8, 2026.

## 'நான் சிறையைப் பார்த்தவன்'- செந்தில் பாலாஜி பேட்டி!!

சென்னை, ஆக. 02–

தமிழக வெற்றிக் கழக (த.வெ.க.) சட்டமன்ற உறுப்பினரிடம் குதிரைப் பேரம் பேச முயன்றதாகப் பதியப்பட்ட வழக்கில், சென்னை திருவல்லிக்கேணி காவல் நிலையத்தில் ஆஜராகி நிபந்தனை கையெழுத்திட்ட பின்னர் முன்னாள் அமைச்சர் வி. செந்தில் பாலாஜி செய்தியாளர்களைச் சந்தித்து பேட்டியளித்தார்.



"நான் எந்த தவறும் செய்யவில்லை. சட்டத்திற்கு அஞ்சி நான் எங்கும் ஓடி ஒளியவும் இல்லை. ஏற்கனவே சிறைவாசத்தைப் பார்த்தவன் நான், அதனால் இந்த அரசியல் பழிவாங்கல் வழக்குகளுக்கு எதற்கும் நான் அஞ்சப்போவதில்லை" எனத் தெரிவித்தார்.

உச்ச நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்ற வழிகாட்டுதல்களின்படியே வழக்கறிஞர்களைச் கலந்தாலோசிக்க கால அவகாசம் கோரப்பட்டதாகவும், தற்போது நீதிமன்ற உத்தரவுக்குக் கட்டுப்பட்டு விசாரணைக்கு முழு ஒத்துழைப்பு அளித்து வருவதாகவும் கூறினார்.


"காவல்துறையினர் பதிவு செய்த எஃப்.ஐ.ஆர்–இல் எனது பெயரோ அல்லது எனது சகோதரர் அசோக் குமாரின் பெயரோ தொடக்கத்தில் இடம்பெறவில்லை. அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாகவே பின்னணியில் எங்கள் பெயர்கள் சேர்க்கப்பட்டுள்ளன. சட்ட ரீதியாக இந்தப் பொய் வழக்குகளை எதிர்கொண்டு முறியடிப்பேன்" என்று கூறினார்.

மக்கள் சந்திக்கும் அத்தியாவசியப் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பதை விட்டுவிட்டு, அரசியல் எதிரிகள் மீது பொய் வழக்குகளைப் பதிவு செய்வதிலேயே அரசு தீவிரமாகச் செயல்பட்டு வருகிறது என்றும் அவர் குற்றம்சாட்டினார்.

த.வெ.க. எம்.எல்.ஏ. இளையராஜா அளித்த புகாரின் பேரில் பதியப்பட்ட வழக்கில் உயர் நீதிமன்றம் செந்தில் பாலாஜி மற்றும் அவரது சகோதரர் அசோக் குமாருக்கு நிபந்தனை முன்ஜாமீன் வழங்கியது. அதனடிப்படையில், திருவல்லிக்கேணி காவல் நிலையத்தில் ஆஜராகி கையெழுத்திட்டு விசாரணைக்கு விளக்கமளித்து வருகிறார்.



தொடர்மழை காரணமாக வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதால் குற்றாலத்தில் அனைத்து அருவிகளிலும் குளிக்க 2வது நாளாக நேற்றும் தடை விதிக்கப்பட்டது. இதனால், விடுமுறை நாளில் ஆவலுடன் நீராட வந்த சுற்றுலா பயணிகள் ஏமாற்றம் அடைந்தனர். இந்த நிலையில், குற்றாலத்தில் நீர்வரத்து இன்று சீரானது. இதனால், 2 நாட்கள் தடைக்கு பின்னர் சுற்றுலா பயணிகள் குளிக்க அனுமதி அளிக்கப்படுகிறது. இதன்படி, தென்காசி மாவட்டம் குற்றாலம் மெயின் அருவி மற்றும் ஐந்தருவியில் குளிப்பதற்கு சுற்றுலா பயணிகளுக்கு அனுமதி அளிக்கப்பட்டு உள்ளது. இதனால், சுற்றுலாவாசிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.



திருப்பதியில் காதலியுடன் இந்திய கிரிக்கெட் அணியின் முன்னணி ஆல்–ரவுண்டர் ஹார்திக் பாண்டியா சாமி தரிசனம்: மொட்டை அடித்து சிறப்பு பிரார்த்தனை!... தனது காதலியான மாடல் அழகி 'மஹிகா சர்மாவுடன்' சேர்ந்து காலை சாமி தரிசனம் செய்தார்.

# நலம் நலமறிய..! மருத்துவ குறிப்புகள்

## காலையில் உடல் சொல்லும் எச்சரிக்கை..!



இதய நோய் திடீரென ஏற்படுவதில்லை. பல வாரங்கள் அல்லது மாதங்களுக்கு முன்பே உடல் சில அறிகுறிகள் மூலம் எச்சரிக்கை அளிக்கக்கூடும். குறிப்பாக, காலையில் எழுந்தவுடன் காரணமில்லாத அதிக சோர்வு, மார்பில் அழுத்தம், இறுக்கம் அல்லது லேசான வலி, மூச்சுத்திணறல் அல்லது அதிக வியர்வை போன்ற அறிகுறிகள் தொடர்ந்து இருந்தால், அவை இதய ஆரோக்கியத்தில் பிரச்சினை இருப்பதற்கான ஆரம்ப அறிகுறிகளாக இருக்கலாம்.

போதுமான தூக்கம் எடுத்த பிறகும் சோர்வு நீடிப்பது, இதயம் உடலுக்குத் தேவையான அளவு ரத்தத்தை பம்ப் செய்ய சிரமப்படுவதைக் குறிக்கலாம். அதேபோல், மார்பில் அசௌகரியம் அல்லது மூச்சுத்திணறல் அடிக்கடி ஏற்பட்டால் அதை அலட்சியப்படுத்தக் கூடாது. இந்த அறிகுறிகள் அனைவருக்கும் ஒரே மாதிரியாக இருக்காது; வேறு உடல்நலக் காரணங்களாலும் ஏற்படலாம். இருப்பினும், அவை தொடர்ந்து நீடித்தாலோ அல்லது மோசமடைந்தாலோ தாமதிக்காமல் மருத்துவரை அணுகி பரிசோதனை செய்து கொள்வது அவசியம். ஆரம்பத்திலேயே கண்டறிவது இதய நோயால் ஏற்படும் கடுமையான பாதிப்புகளைத் தடுக்கவும், உயிரைக் காக்கவும் உதவும்.

# தென்னக ரயில்வே புதிய பொது மேலாளராக யு. சுப்பா ராவ் பொறுப்பேற்பு!



சென்னை, ஆக. 02–

தென்னக ரயில்வேயின் புதிய பொது மேலாளராக (General Manager) யு. சுப்பா ராவ் ஆகஸ்ட் 1, 2026 அன்று பொறுப்பேற்றார். இதற்கு முன்பு அவர் சென்னை இன்டிகிரல் கோச் பேக்டரி (ICF) பொது மேலாளராக பணியாற்றி வந்தார்.

1987–ஆம் ஆண்டு இந்திய ரயில்வே இயந்திரப் பொறியியல் சேவை (IRSME) அதிகாரியான யு. சுப்பா ராவ், தென்மேற்கு ரயில்வே கூடுதல் பொது மேலாளர், முதன்மை இயந்திரப் பொறியாளர், சேலம் கோட்ட ரயில்வே மேலாளர் (DRM), தென் மத்திய ரயில்வே முதன்மை இயந்திரப் பொறியாளர் (திட்டமிடல்), மைசூரு கோச்சிங் ஒர்க்ஷாப் தலைமை மேலாளர் மற்றும் பெங்களூரு ரயில் சக்கர தொழிற்சாலை தலைமை ஒர்க்ஷாப் பொறியாளர் உள்ளிட்ட முக்கிய பொறுப்புகளை வகித்துள்ளார்.

பெங்களூரு ரயில் சக்கர தொழிற்சாலையில் 2011–12 நிதியாண்டில் ஒரே ஆண்டில் 2 லட்சம் ரயில் சக்கரங்கள்உற்பத்தி செய்யப்பட்ட சாதனையில் முக்கிய பங்காற்றியவர். மேலும், ICF பொது மேலாளராக இருந்தபோது, இந்திய ரயில்வேயின் சிறந்த உற்பத்தி அலகு விருது, Change Maker Award, CII தேசிய விருது, Star Performer Awardமற்றும் தேசிய எரிசக்தி சேமிப்பு புதுமை விருது உள்ளிட்ட பல்வேறு தேசிய விருதுகளை ICF பெற வழிநடத்தினார். இயந்திரப் பொறியியலில் பட்டம் பெற்றுள்ள அவர், இந்திய மேலாண்மை நிறுவனம் (IIM), பெங்களூருவில் பொது கொள்கை மற்றும் மேலாண்மையில் முதுநிலைப் பட்டமும் பெற்றுள்ளார். மேலும், பாரிஸ், ஜொகன்னஸ்பர்க் உள்ளிட்ட நகரங்களில் உயர்மட்ட நிர்வாகப் பயிற்சிகளையும், அமெரிக்காவின் Transportation Technology Center (TTCI)–யில் EMU Cast Wheels வடிவமைப்பு சரிபார்ப்பு பணிகளிலும் பங்கேற்றுள்ளார். இவர், தென் மத்திய ரயில்வேயின் முன்னாள் Chief Planning and Design Engineer யு. நரசிம்ம ராவின் மகனும், இரண்டாம் தலைமுறை ரயில்வே அதிகாரியும் ஆவார். ஜூலை 31, 2026 அன்று ஓய்வு பெற்ற ஆர்.என். சிங்கிற்கு பதிலாக யு. சுப்பா ராவ் தென்னக ரயில்வே பொது மேலாளராக பொறுப்பேற்றுள்ளார்.



இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி தலைவர்களின் ஒருவரான இளம் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் ராகுல் காந்தி அவர்களை திருப்பூர் மாநகர் மாவட்ட தலைவர் கோபால்சாமி மற்றும் மாமன்ற உறுப்பினர் விஜயலட்சுமி கோபால்சாமி ஆகியோர் பயிற்சி முகாம் பத்து நாள் நிறைவு பெற்றதை ஒட்டி குடும்பத்தோடு அவரிடம் புகைப்படம் எடுத்துக் கொண்டனர்...

# மதுரையில் அறிவிக்கப்படாத மின்தடையால் மக்கள் அவதி!




மதுரை, ஆக. 03–

மதுரை மாநகரில் சமீப நாட்களாக அறிவிக்கப்படாத மின்தடை தொடர்ந்து ஏற்பட்டு வருவதால் பொதுமக்கள் கடும் சிரமத்தை எதிர்கொள்கின்றனர். சிம்மக்கல், அரசரடி, ஆரப்பாளையம், கோச்சடை, விளாங்குடி, செல்லூர், அய்யர் பங்களா, ஆனையூர் உள்ளிட்ட பல பகுதிகளில் இரவு நேரங்களில் ஒரு மணி நேரத்திற்கும் மேலாக மின்சாரம் துண்டிக்கப்படுவதாக மக்கள் குற்றம்சாட்டுகின்றனர்.

இரவு நேர மின்தடையால் வெப்பம், கொசுத்தொல்லை காரணமாக மக்கள் நிம்மதியாக உறங்க முடியாமல் தவிக்கின்றனர். மாணவர்கள் தேர்வுக்கு படிக்க முடியாமல் அவதிப்படுவதுடன், வேலைக்குச் செல்வோரும் சிரமங்களை சந்திக்கின்றனர். மேலும், காலை பள்ளி மற்றும் கல்லூரிக்குச் செல்லும் நேரங்களில் மின்தடை ஏற்படுவதால் மாணவர்கள் தாமதமாகச் செல்வதும், கல்வி பாதிக்கப்படுவதும் தொடர்கிறது.

மின்தடைக்கான காரணத்தை அறிய மின்வாரிய கட்டுப்பாட்டு அறையை பலமுறை தொடர்புகொண்டாலும் உரிய பதில் கிடைப்பதில்லை என்றும் பொதுமக்கள் வேதனை தெரிவிக்கின்றனர். அதிக வெப்பம் பதிவாகும் மதுரையில் தடையற்ற மின்விநியோகம் வழங்கப்பட வேண்டும் என்றும், பராமரிப்பு அல்லது பழுதுபார்ப்பு பணிகளால் மின்தடை ஏற்படும் சூழலில் முன்கூட்டியே பொதுமக்களுக்கு அறிவிப்பு வெளியிட வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர். மின்தடைக்கான புகார்களுக்கு உடனடி நடவடிக்கை எடுக்கவும், மின்விநியோகத்தை விரைவில் சீரமைக்கவும் மின்வாரியம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கையும் எழுந்துள்ளது.

# டி.கே. சிவக்குமார் உடன் சேர்ந்து கொண்டு திமுக முட்டுக்கட்டை: அமைச்சர் நிர்மல்குமார்!



சென்னை, ஆக. 02–

சென்னை விமான நிலையத்தில் அமைச்சர் சி.டி.ஆர். நிர்மல்குமார் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் பேசியதாவது:–

காவிரி நதிநீர் தொடர்பாக நேற்று காலை முதல்வர் பல தரப்பு ஆலோசனையை முடித்துவிட்டு, உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்க வேண்டும் என்று முடிவு செய்து, வழக்கறிஞர் உமாபதியிடம் வழக்கு குறித்து ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது. இதையடுத்து காவிரி குறித்தான வழக்கை திமுக அவசரமாக ஐந்து மணிக்குமேல் பதிவு செய்கிறார்கள்.

இந்த மாதிரி ஒரே மாநிலத்தில் காவிரி நதி நீர் தொடர்பாக பல வழக்குகள் தொடரப்பட்டால், அது பல்வேறு விதமான குழப்பத்தை ஏற்படுத்தி, மாநிலத்திற்கான உரிமைகளை பின்னோக்கித் தள்ளும்.

திராவிட முன்னேற்ற கழகத்தின் சார்பில் காவிரி பிரச்சனை குறித்து கடந்த ஐந்து வருடங்களாக எந்தவொரு வழக்கும் நீதிமன்றத்தில் பதிவு செய்யப்படவில்லை.

கடந்த முப்பது ஆண்டுகளாக காவிரி நதி நீர் பிரச்சனையில், தமிழகத்திற்கு பின்னடைவை ஏற்படுத்தியது திமுக–வும் அதன் தலைவர் கருணாநிதியும்தான். மறுபடியும் அதே குழப்பத்தை ஏற்படுத்த முயற்சி செய்கிறார்கள்.

மற்றொரு புறம் காவிரி பிரச்சனை தொடர்பாக சரியான முடிவை எடுத்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவுக்கு எதிராகவும், பாரதிய ஜனதா கட்சிக்கு ஆதரவாகவும், அதிமுக செயல்பட்டு வருகிறது.

இந்த மாதிரியான சூழலில் தமிழக மக்களின் உரிமைகளை காக்க, நாளை உச்சநீதிமன்றத்தில் முதல்வரின் உத்தரவின் பேரில் வழக்குப் பதிவு செய்யப்பட உள்ளது.

திமுக–விற்கும் கர்நாடக முதல்வர் டி.கே.சிவகுமாருக்கும் இடையே இருக்கும் நெருங்கிய உறவு, இந்த மாதிரியான பல குழப்பங்கள் மூலமாக தெளிவாக தெரிகிறது.

இந்த மாதிரியான செயல்களை திமுக குறைத்து கொள்ள வேண்டும். முதலில் மக்கள் உங்களுக்கு அளித்த தீர்ப்பை குறித்து உணருங்கள்.

தமிழகத்திற்கு எதிரான இந்த செயல்பாடுகளை, நீங்கள் தொடர்ந்து செய்யாதீர்கள். இந்த பிரச்சனைக்கு தமிழக முதல்வர் சுமூகமான வழியில் தீர்வை காண அனைத்து வகையிலும் முயற்சி மேற்கொண்டார்.

ஆனால் அனைத்து வகையிலும், கர்நாடக முதல்வருடன் திமுக சேர்ந்து கொண்டு, ஏதாவது ஒரு வகையில் முட்டுக்கட்டை போட்டுக்கொண்டே வருகிறது.

முதலமைச்சர் விஜய் தனிமைப்படுத்தப்பட்டு இருப்பதாக திமுக தலைவர் மு.க. ஸ்டாலின் கூறுகிறார்.

தமிழகத்திற்கு 17 டி.எம்.சி காவிரி நீர் வர வேண்டி இருக்கிறது, வினாடிக்கு 3,500 கன அடி என்பது மட்டும் போதாது.

ஜெயலலிதா முதல்வராக இருந்தபோது, கர்நாடகாவில் இருந்து தண்ணீர் திறக்க கூடாது என முன்னாள் முதல்வர் கருணாநிதி அழுத்தம் கொடுத்தார்.

ஜெயலலிதாவுக்கு பெயர் கிடைத்து விடக்கூடாது என்பதற்காக கருணாநிதி செய்தது போல், தற்போது செய்கிறார்கள்.

த.வெ.க. எம்.எல்.ஏ.க்களை விலைக்கு வாங்கும் விஷயத்தில், பெரும்பாலான பணங்கள் பெங்களூரில் இருந்துதான் பரிமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

திமுக தலைமை எவ்வாறு பெங்களூரில் இருந்து, பணப்பரிமாற்றத்தில் ஈடுபட்டது. பெங்களூர் உடன் திமுக தலைமை அவ்வளவு நெருக்கமாக உள்ளது.

கர்நாடக முதல்வர் டி.கே.சிவகுமார் காங்கிரஸ் தலைமை சொல்வதை கேட்பதே இல்லை, மாறாக திமுக சொல்வதைத்தான் கேட்கிறார்.

இவ்வாறு அமைச்சர் சி.டி.ஆர். நிர்மல்குமார் கூறினார்.

# சென்னை சூப்பர் கிங்ஸில் மாற்றம்!



சென்னை, ஆக. 02–

சென்னை சூப்பர் கிங்ஸ் (CSK) அணியின் தலைமைப் பயிற்சியாளர் நியமனம் தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. ஸ்டீபன் பிளெமிங் இங்கிலாந்து டெஸ்ட் அணியின் பயிற்சியாளராக பொறுப்பேற்றதைத் தொடர்ந்து, புதிய பயிற்சியாளரை நியமிக்காமல் 2027 ஐபிஎல் சீசன் வரை மைக் ஹஸ்ஸியே அணியை வழிநடத்துவார் என கூறப்படுகிறது.

மேலும், 2027 சீசனில் தோனி அணியின் அதிகாரப்பூர்வ ஆலோசகராக செயல்படுவார் என்றும், வீரர்கள் பரிமாற்றம் (Trading) உள்ளிட்ட முக்கிய முடிவுகளில் அவரது கருத்தே இறுதியானதாக இருக்கும் என தகவல் வெளியாகியுள்ளது. அதேநேரத்தில், 2027 உலகக் கோப்பைக்குப் பிறகு இங்கிலாந்து அணியிலிருந்து விலகும் பிரண்டன் மெக்கல்லத்தை CSK–வின் நிரந்தர தலைமைப் பயிற்சியாளராக நியமிக்க நிர்வாகம் திட்டமிட்டுள்ளதாகவும்கூறப்படுகிறது.

# கீழக்கரையில் 'மதினா ரெடிமேட்ஸ் & டெய்லரிங்' திறப்பு விழா!




ராமநாதபுரம், ஆக. 02–

ராமநாதபுரம் மாவட்டம் கீழக்கரை வள்ளல் சீதக்காதி சாலை, வடக்கு தெரு பள்ளி எதிர்புறம், அனஸ் காம்ப்ளக்ஸில் புதிதாக தொடங்கப்பட்ட மதினா ரெடிமேட்ஸ் & டெய்லரிங் நிறுவனத்தின் உரிமையாளர் அப்துல்மாலிக் தலைமையில் எஸ்டிபிஐ கட்சியின் மாநில துணைத் தலைவர் பி. அப்துல் ஹமீது முன்னிலை யில் திறப்பு விழா நடைபெ ற்றது. எஸ்டிபிஐ கட்சியின் மாவட்ட துணைத் தலைவர் ஜஹாங்கீர் அரூசி இறை வசனம் ஓதி நிகழ்ச்சியைத் தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் எஸ்டிபிஐ கட்சியின் நகர் செயல் தலைவர் முஹைதீன் பாரூக், செயலாளர் கீழை அஸ்ரப், பாரூக் ராஜா முஹம்மது, அஹமது நதீர், தொகுதி செயற்குழு உறுப்பினர் பக்ருதீன் அலி, சேக், மோர்குளம் இலியாஸ், சீனாக்கா, ஜின் செய்து அபுதாஹீர், சலீம், ஜகுபர் அலி, ஹமீது பாக்கர், சுன்னத் ஜமாஅத் நகர் தலைவர் கபூர், இலியாஸ், ரிச்வேல்ட் சேகு, இமாம் அலி, முஜாஹிதீன், செல்லா, அன்சாரி, கும்பிடு மதுரை, அபுதாஹீர், ஜாசீர், விடுதலை சிறுத்தைகள் கட்சியின் மாவட்ட துணைச் செயலாளர் அசாருதீன், அற்புதம், திமுகவைச் சேர்ந்த ரஹ்மான், கபீர் உள்ளிட்ட பல்வேறு அரசியல் மற்றும் சமூக அமைப்புகளின் நிர்வாகிகள், தொழிலதிபர்கள் மற்றும் ஏராளமான பொது மக்கள் கலந்து கொண்டு, புதிய நிறுவனத்தின் வளர்ச்சிக்காக வாழ்த்துகளைத் தெரிவித்தனர். இறுதியில், நிகழ்ச்சியில் பங்கேற்ற அனைவருக்கும் நிறுவனத்தின் சார்பில் நன்றி தெரிவிக்கப்பட்டது.

# தமிழக வெற்றிக்கழக அலுவலகம் திறப்பு விழா!




திருப்பூர், ஆக. 02–

தமிழக வெற்றிக்கழக மண்ணரை பகுதி 34 வது வார்டில் பகுதி இளைஞரணி அலுவலக திறப்பு விழா மற்றும் 34 வது பி அலுவலக திறப்பு விழா நடைபெற்றது விழாவிற்கு திருப்பூர் மாநகர மாவட்ட செயலாளர் தெற்கு தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் பாலமுருகன் எம்எல்ஏ அவர்கள் கலந்து கொண்டு ரிப்பன் வெட்டி துவக்கி வைத்த இந்த நிகழ்வில் பகுதி செயலாளர் யுவராஜ் வார்டு செயலாளர்கள் பாலமுருகன். உதயகுமார். லோகநாதன். பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் சுதன் மற்றும் சார்பு அணி நிர்வாகிகள் தமிழக வெற்றிக்கழக நிர்வாகிகள் பொதுமக்கள் பெரும் திரளாக பங்கேற்றனர்.

# வேலை வாய்ப்பு

## மத்திய அரசு (ITAT) ல் 42 நிரந்தர பணியிடங்கள்!

நிறுவனத்தின் பெயர்: வருமான வரி மேல்முறையீட்டு தீர்ப்பாயம் (Income Tax Appellate Tribunal – ITAT)
அறிவிப்பு எண்: F.301–Ad(ATD)/DR/2026–27
பணி வகை: மத்திய அரசு வேலை
பணியிடம்: நிரந்தர பணி
மொத்த காலியிடங்கள்: 42
மூத்த தனிச் செயலாளர் (Senior Private Secretary) 22
தனிச் செயலாளர் (Private Secretary) 20
பணியிடம்: இந்தியா முழுவதும்
ஆன்லைன் விண்ணப்பம் தொடக்கம்: 18.07.2026
விண்ணப்பிக்க கடைசி நாள்: 16.08.2026
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்
அதிகாரப்பூர்வ இணையதளம்: http://itat.gov.in

# 20% தள்ளுபடியுடன் மருந்து விற்பனையில் டிமார்ட்!




மும்பை, ஆக. 02–

டிமார்ட் நிறுவனத்தின் தாய் நிறுவனமான அவென்யூ சூப்பர்மார்ட்ஸ், மருந்து விற்பனை (Pharmacy) துறையில் புதிய வர்த்தக முயற்சியை தொடங்கியுள்ளது.

இதற்காக Reflect Healthcare and Retail Pvt. Ltd. என்ற நிறுவனத்தை உருவாக்கியுள்ள டிமார்ட், தற்போது மும்பையில் சோதனை அடிப்படையில் 20% வரை தள்ளுபடியுடன் மருந்துகளை விற்பனை செய்து வருகிறது.

தனி மருந்தகங்களை தொடங்காமல், ஏற்கனவே உள்ள டிமார்ட் கடைகளிலேயே இந்த சேவையை வழங்குவதன் மூலம் செலவைக் குறைக்கும் திட்டத்தை நிறுவனம் செயல்படுத்தியுள்ளது. டிமார்ட்டின் அதிக தள்ளுபடி காரணமாக பாரம்பரிய மருந்தகங்கள் மற்றும் ஆன்லைன் பார்மசி நிறுவனங்களுக்கு கடும் போட்டி உருவாகும் என துறை வல்லுநர்கள் தெரிவிக்கின்றனர்.

# சபரிமலையில் நெய் அப்பம், அரவணை தயாரிப்பில் அதிரடி?



திருவனந்தபுரம், ஆக. 03–

சபரிமலை ஐயப்பன் கோயிலில் பக்தர்கள் காணிக்கையாக வழங்கும் நெய் அப்பம் மற்றும் அரவணை தயாரிப்பு தொடர்பாக முக்கிய முடிவு எடுக்கப்பட்டுள்ளது. பக்தர்கள் வழங்கும் காணிக்கைகளை கோயில் நிர்வாகத்தின் தரநிலைகள் மற்றும் உணவு பாதுகாப்பு விதிமுறைகளுக்கு உட்பட்டு தயாரிக்கும் நடைமுறையை மேம்படுத்துவது குறித்து ஆலோசிக்கப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கையின் மூலம் பிரசாதத்தின் தரம், சுகாதாரம் மற்றும் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

சபரிமலைக்கு ஆண்டு தோறும் கோடிக்கணக்கான பக்தர்கள் வருகை தருவதால், நெய் அப்பம் மற்றும் அரவணை தயாரிப்பு, சேமிப்பு மற்றும் விநியோகத்தில் கூடுதல் கவனம் செலுத்தப்படுகிறது. பக்தர்களின் நம்பிக்கையைப் பாதுகாக்கும் வகையில், காணிக்கைகள் முறையாக பயன்படுத்தப்படுவதை உறுதி செய்யவும், தரமான பிரசாதம் வழங்கவும் தேவஸ்வம் நிர்வாகம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இந்த முடிவு, சபரிமலை பிரசாத தயாரிப்பு முறையை மேலும் ஒழுங்குபடுத்தும் நடவடிக்கையாக பார்க்கப்படுகிறது.




இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்
127, T.P.K.ரோடு,
மதுரை.
Ph: 98659 88882
மதுரை to சென்னை
ரெகுலர் சர்வீஸ்
பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது
சென்னை
Ph: 98659 88881



## இன்றைய கார்ட்டூன்




# ஜூலை மாத ஜி.எஸ்.டி. வசூல் 15 சதவீதம் உயர்வு!

புதுடெல்லி, ஆக. 02–

கடந்த ஜூலை மாதத்தில் நாட்டின் மொத்த ஜி.எஸ்.டி. வசூல் 15 சதவீதம் உயர்ந்துள்ளது. இது குறித்து மத்திய நிதி அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: ஜூலை மாதத்தில் மொத்த ஜி.எஸ்.டி., வசூல் ரூ.2,11,950 கோடி பதிவாகியுள்ளது. கடந்த ஆண்டு இதே மாதத்தில் வசூலான ரூ.1,83,660 கோடியுடன் ஒப்பிடுகையில் இது 15.4 சதவீதம் அதிகமாகும். உள்நாட்டு பரிவர்த்தனைகளில் இருந்து கிடைத்த ஜி.எஸ்.டி., வரி வசூல் கணிசமாக உயர்ந்துள்ளது. அதேபோல், இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் மீதான வரி வசூலும் அதிகரித்துள்ளது. இதன் காரணமாக மொத்த வரி வசூல் வலுவான வளர்ச்சியை பதிவு செய்து ள்ளது. பொருளாதார நடவடிக்கைகள் தொடர்ந்து மேம்பட்டு வருவதும், நுகர்வு மற்றும் வர்த்தக பரிவர்த்தனைகள் அதிகரித்திருப்பதும் வரி வசூல் உயர்வுக்கு முக்கிய காரணங்களாக அமைந்துள்ளன. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.




# நீட் தகுதி மதிப்பெண் அடிப்படையில் மருத்துவ படிப்பில் சேர்வதற்கான கலந்தாய்வு 4-ந்தேதி தொடங்குகிறது!

புதுடெல்லி, ஆக. 02–

நாடு முழுவதும், நீட் தகுதி மதிப்பெண் அடிப்படையில் நடைபெறும் எம்.பி.பி.எஸ். பி.டி.எஸ். படிப்புகளுக்கான மாணவர் சேர்க்கைக்கான பட்டியலை மத்திய மருத்துவ கவுன்சில் வெளியிட்டுள்ளது.

அதன்படி, முதற்கட்ட அகில இந்திய மருத்துவ கலந்தாய்வு வருகிற 4–ந்தேதி தொடங்கி 17–ந்தேதி வரை நடைபெற உள்ளது. மாநில அளவிலான கலந்தாய்வு வருகிற 13–ந்தேதி தொடங்கி 22–ந்தேதி வரை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, 4 கட்ட கலந்தாய்வு மற்றும் மாணவர்கள் கல்லூரிகளில் சேருவதற்கான கால அவகாசம் அக்டோபர் 10–ந்தேதி வரை வழங்கப்பட்டுள்ளது. தமிழகத்தை பொறுத்தவரையில் மருத்துவ மாணவர்சேர்க்கைக்குவிண்ணப்பித்துள்ள 72 ஆயிரத்து 627 மாணவர்களின் விண்ணப்பங்கள் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. அதனடிப்படையில் தரவரிசை பட்டியல் விரைவில் வெளியிடப்பட்டு கலந்தாய்வு அட்டவணையை மருத்துவ கல்வி இயக்ககம் வெளியிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.




# ரேஷன் கடைகளில் கைவிரல் ரேகை பதிவு சிறப்பு முகாம்!

சென்னை, ஆக. 02–

கூட்டுறவு சங்கங்களின் கூடுதல் பதிவாளர் (சென்னை மண்டலம்) வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:–

சென்னை மாவட்டத்தில் உள்ள அனைத்து ரேஷன் கடைகளில் இ–கே.ஒய்.சி. (மின்னணு முறையில் வாடிக்கையாளரை அறி தல்) பதிவு சிறப்பு முகாம் (ஞாயிற்றுக்கிழமை) நடக்கிறது. அனைத்து குடும்ப அட்டைதாரர்களும் தங்கள் குடும்ப அட்டையில் இடம் பெற்றுள்ள குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் கைவிரல் ரேகையை கட்டாயம் பதிவு செய்ய வேண்டும்.

தற்போது வரை கைவிரல் ரேகையை பதிவு செய்யாதவர்கள் நடைபெறும் சிறப்பு முகாமுக்கு சென்று தங்க ளது கைவிரல் ரேகையை பதிவு செய்திட வேண்டும். பணி நிமித்தமாக வேறு பகுதிகளில் தற்காலிகமாக வசிப்பவர்கள் இப்போது வசிக்கும் பகுதிக்கு அருகில் உள்ள ரேஷன் கடைக்கு சென்று தங்கள் கைவிரல் ரேகையை பதிவு செய்யலாம். எனவே, அரசின் இந்த அரிய வாய்ப்பை பயன்படுத்தி பொதுமக்கள் அனைவரும் விரல் ரேகைப் பதிவை விடுதலின்றி முழுமையாக பதிவு செய்ய வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.




# கொல்லிமலை மலைப்பாதையில் 2 நாட்களுக்கு போக்குவரத்து மாற்றம்!

நாமக்கல், ஆக. 02–

வல்வில் ஓரி விழாவையொட்டி, போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்படுத்தவும், பக்தர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் பாதுகாப்பாக பயணம் செய்யவும், கொல்லி மலை மலைப்பாதையில் இன்று மற்றும் நாளை ஆகிய இரண்டு நாள்களுக்கு தற்காலிகமாக ஒருவழிப் போக்குவரத்து முறை அமல்படுத்தப்பட்டுள்ளது.

இதன்படி, கொல்லிமலைக்கு செல்லும் அனைத்து வாகனங்களும் காரவள்ளி மலைப்பாதை வழியாக மட்டுமே அனுமதிக்கப்படும். அதேபோல், கொல்லி மலையில் இருந்து கீழே இறங்கும் வாகனங்கள் முள்ளுக்குறிச்சி மலைப்பா தை வழியாக மட்டுமே இயக்கப்பட வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோல, செம்மேடு, செங்கரை, சோளக்காடு ஆகிய இடங்களில் உள்ள 3 டாஸ்மாக் மதுபான சில்லறை விற்பனைக் கடைகள் மற்றும் சேந்தமங்கலம் வட்டம், காரவள்ளியில் செயல்படும் ஒரு மதுபான சில்லறை விற்பனைக் கடை என 4 கடைகளும் இரண்டு நாட்கள் கட்டாயம் மூட வேண்டும் என்று உத்தரவிடப்ப ட்டுள்ளது. மேலும் நாமக்கல் மாவட்டத்திற்கு நாளை உள்ளூர் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.





பள்ளிக் கல்வி, தமிழ் வளர்ச்சி, செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் ராஜ்மோகன் தலைமையில் சென்னை கலைவாணர் அரங்கத்தில், அனைத்து மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களின் பணி ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் திரு.வே.ராஜாராமன், செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு.அ.அருண் தம்புராஜ் மற்றும் செய்தித் துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# 2040-ம் ஆண்டு நிலவுக்கு மனிதர்கள் செல்வார்கள்: இஸ்ரோ தலைவர்!

புதுடெல்லி, ஆக. 02–

இந்தியாவின் சொந்த விண்வெளி நிலையத்தை 2035–ம் ஆண்டுக்குள் அமைப்பதற்கும், 2040–ம் ஆண்டுக்குள் இந்திய ராக்கெட் மூலம் இந்தியரை நிலவுக்கு அனுப்புவதற்கும் இஸ்ரோ இலக்கு நிர்ணயித்து தீவிரமாக பணியாற்றி வருகிறது என்று இஸ்ரோ தலைவர் வி.நாராயணன் தெரிவித்தார். இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது:–இந்தியாவை வருகிற 2047–ம் ஆண்டுக்குள் வளர்ந்த நாடாக மாற்றுவதற்கு கல்வி நிறுவனங்கள், தொழில் நிறுவனங்கள் மற்றும் ஆராய்ச்சி அமைப்புகளுக்கு இடையே வலுவான ஒத்துழைப்பு அவசியம். ஆராய்ச்சிகள் வெறும் கட்டுரைகளாக மட்டும் நின்றுவிடாமல், சமூகத்திற்கு பயன் தரும் தொழில்நுட்பங்களாகவும், காப்புரிமைகளாகவும், தயாரிப்புகளாகவும் மாற வேண்டும்.




இஸ்ரோவின் பங்களிப்புகளாக, தொலைதொடர்பு, வானிலை முன்னறி விப்பு, பேரிடர் மேலாண்மை, விவசாயம், மீன்வளம், நீர் வளங்கள் மற் றும் எல்லை பாதுகாப்பு உள்ளிட்ட 50–க்கும் மேற்பட்ட துறைகளுக்கு இஸ்ரோவின் செயற்கைக்கோள்கள் ஆதரவளித்து வருகிறது.குறிப்பாக செயற்கைக்கோள் மூலம் வழங்கப்படும் ஆலோசனைகள் மீனவர்களின் வருமானத்தை மேம்படுத்த உதவியுள்ளது.தொடக்கத்தில் பல்வேறு சவால்கள் இருந்தபோதிலும், இந்தியா உள்நாட் டிலேயே 'கிரையோஜெனிக்' தொழில்நுட்பத்தை உருவாக்கி உள்ளது.

இஸ்ரோவின் பங்களிப்புகளாக, தொலைதொடர்பு, வானிலை முன்னறி விப்பு, பேரிடர் மேலாண்மை, விவசாயம், மீன்வளம், நீர் வளங்கள் மற்றும் எல்லை பாதுகாப்பு உள்ளிட்ட 50–க்கும் மேற்பட்ட துறைகளுக்கு இஸ்ரோவின் செயற்கைக்கோள்கள் ஆதரவளித்து வருகிறது.குறிப்பாக செயற்கைக்கோள் மூலம் வழங்கப்படும் ஆலோசனைகள் மீனவர்களின் வருமானத்தை மேம்படுத்த உதவியுள்ளது.தொடக்கத்தில் பல்வேறு சவால்கள் இருந்தபோதிலும், இந்தியா உள்நாட் டிலேயே 'கிரையோஜெனிக்' தொழில்நுட்பத்தை உருவாக்கி உள்ளது.

ஏவுதல் திறன்களுக்காக சர்வதேச அளவில் அங்கீகாரம் பெற்றுள்ளதை யும் அவர் நினைவுகூர்ந்தார். 'சந்திரயான்' திட்டம் மற்றும் ஒரே பயணத் தில் 104 செயற்கைக்கோள்களை விண்ணில் செலுத்தியது போன்றவை இஸ்ரோவின் முக்கிய மைல்கற்கள் ஆகும்.மாணவர்களுக்கு கூட்டு ஆராய்ச்சி, பயிற்சிகள் மற்றும் புதிய கண்டுபிடிப் புகளை உருவாக்குவதற்கான அதிக வாய்ப்புகளை இஸ்ரோ வழங்கும்' இவ்வாறு அவர் கூறினார்.

# பெரு நாட்டில் நாஸ்கா அருகே சுற்றுலா விமானம் விழுந்து விபத்துக்குள்ளானதில் 13 பேர் உயிரிழப்பு!

பெரு, ஆக. 02–

பெரு நாட்டில் நாஸ்கா அருகே சுற்றுலா விமானம் விழுந்து விபத்துக்குள்ளானதில் 11 பயணிகள் மற்றும் 2 விமானிகள் உட்பட மொத்தம் 13 பேர் உயிரிழந்தனர். இந்த விமானத்தை, நாஸ்கா கோடுகளின் மீது சுற்றுலாப் பயணங்களை நடத்தும் பெருவியன் நிறுவனமான ஏரோடியானா இயக்கியது. மேலும், இந்நிறுவனம் வாடகை மற்றும் சரக்கு சேவைகளையும் வழங்கி வருகிறது. சில அறிக்கைகளில் இந்த விமானம் செஸ்னா கேரவன், கிராண்ட் கேரவன் என விவரிக்கப்பட்டுள்ளது.



பிரபலமான நாஸ்கா கோடுகளின் புவிக்கோட்டுச் சித்திரங்களின் மீது சுற்றுலாப் பயணம் மேற்கொள்வதற்காக, இந்த விமானம் பிஸ்கோ விமான நிலையத்திலிருந்து புறப்பட்டது. இகா பிராந்தியத்தில் உள்ள நாஸ்கா நகரத்திலிருந்து சுமார் 6 கிலோமீட்டர் தொலைவில், பியூப்லோ விஜோ பகுதியில் உள்ள ஒரு விவசாய நிலத்தில், உள்ளூர் நேரப்படி மதியம் 12:55 மணியளவில் இந்த விபத்து நிகழ்ந்தது. விமானம் மோதியவுடன் தீப்பிடித்ததில் இதில் யாரும் உயிர் தப்பவில்லை. ஏரோடியானா (Aerodiana) என்ற உள்ளூர் நிறுவனத்திற்குச் சொந்தமான சிறிய ரக சுற்றுலா விமானம், யுனெஸ்கோ உலக பாரம்பரிய தளமான நாஸ்கா லைன்ஸ் பகுதியை வான்வழியாகச் சுற்றிப் பார்க்க சுற்றுலாப் பயணிகளை ஏற்றிச் சென்றபோது விபத்துக்குள்ளானது.

பிஸ்கோ (Pisco) விமானநிலையத்திலிருந்து புறப்பட்ட இந்த விமானம், நாஸ்கா நகருக்கு வெளியே உள்ள 'புவெப்லோ விஹோ' (Pueblo Viejo) பகுதிக்கு அருகில் உள்ள ஒரு வயல்வெளியில் விழுந்து நொறுங்கியது. விமானம் விழுந்தவுடன் உடனடியாக தீப்பற்றி எரிந்ததால், அதில் பயணித்த எவரும் உயிர் பிழைக்க வாய்ப்பில்லாமல் போனதாக உள்ளூர் காவல்துறையினர் தெரிவித்துள்ளனர். உயிரிழந்த பயணிகளில் இத்தாலிய நாட்டு சுற்றுலாப் பயணிகளும் அடங்குவர் என முதற்கட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன. விபத்துக்கான காரணம் என்ன என்பது குறித்து உடனடித் தகவல் எதுவும் இல்லை.


# பிரபல நடிகையை கரம் பிடிக்கும் பேச்சாளர்?

சென்னை,. ஆக. 02–

பிரபல ஆன்மீக பேச்சாளர் மகா விஷ்ணு மற்றும் நடிகை மிருணாளினி ரவி ஆகியோர் திருமணம் செய்ய உள்ளதாக அறிவித்து ள்ளனர். இந்த தகவலை இருவரும் தங்களது சமூக வலைதள பக்கங்களில் அதிகாரப்பூர்வமாக பகிர்ந்துள்ளனர். தமிழ் சினிமாவில் 'சூப்பர் டீலக்ஸ்' திரைப்படத்தின் மூலம் அறிமுகமான மிருணாளினி ரவி, பின்னர் சாம்பியன், எனிமி, எம்ஜிஆர் மகன், ஜாங்கோ, கோப்ரா உள்ளிட்ட படங்களில் நடித்தார். தெலுங்கிலும் பல படங்களில் நடித்துள்ள அவர், கடைசியாக விஜய் ஆண்டனி நடித்த 'ரோமியோ' படத்தில் தோன்றியிருந்தார். இந்நிலையில், மகா விஷ்ணுவை தனது காதலர் என அறிமுகப்படு த்திய மிருணாளினி ரவி, தனது இன்ஸ்டாகிரா ம் பதிவில், "உங்களை காதலிக்க தொடங்கி யபோது, என்னை நானே காதலிப்பது போல உணர்ந்தேன். ஒவ்வொரு பிறவியிலும், ஒவ்வொரு பிரபஞ்சத்திலும் நான் எப்போதும் உன்னையே தேர்ந்தெடுப்பேன்" என்று நெகிழ்ச்சியுடன் குறிப்பிட்டுள்ளார்.



இதையடுத்து, மகா விஷ்ணு தனது எக்ஸ் (X) தள பதிவில், "திருமணத்தில் தவறு இல்லை; புரிதல் இல்லாத திருமணம்தான் தவறு. நம்பிக்கை ஊற்றெடுத்ததால் இரு மனம் ஒரு மனமாகி, திருமணம் நிச்சயமானது. 7 ஆண்டுகள் நட்பாக இருந்த உறவு காதலாக மாறி இன்று வாழ்க்கைப் பயணமாகிறது. சர்வதேச தோழிகள் தினத்தை முன்னிட்டு மிருணாளினி ரவி என் வாழ்வின் புதிய அத்தியாயத்தை அறிமுகப்படுத்தியுள்ளார்" என்று தெரிவித்துள்ளார்.



## சினிமா துளிகள்..!

# 'தர்மன்' இடைவெளியில் 'ஜெயிலர் 2'!




கமலின் தயாரிப்பில், அஷ்வத் மாரிமுத்து இயக்கத்தில் ரஜினி நடித்துவரும் 'தர்மன்' படப்பிடிப்பு சென்னையில் சீறிப்பாய்ந்து போய்க்கொண்டிருக்கிறது.

இந்தப் படத்தில் ரஜினியின் ஜோடியாக சிம்ரன் நடிக்கிறார். முக்கியமான வேடத்தில் ராஷி கண்ணாவும் கமிட்டாகியிருக்கிறார். இன்னொரு பக்கம், நெல்சன் இயக்கிவரும் 'ஜெயிலர் 2' படத்தின் இறுதிக்கட்ட பணிகளும் மும்முரமாக நடந்துவருகின்றன. 'தர்மன்' படப்பிடிப்பின் இடைவெளியில், 'ஜெயிலர் 2' டப்பிங்கைப் பேசிக்கொடுக்கத் திட்டமிட்டு, பரபரப்பாகப் பணிபுரிந்துகொண்டிருக்கிறார் ரஜினி. தர்மனுக்கு பின் கமலுடன் சேர்ந்து ரஜினி நடிக்கும் படம் 2027 முடிவில் அல்லது 2028 இல் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.


# 100 இடங்களில் படமான துல்கர் சல்மானின் 'ஐ அம் கேம்'!



துல்கர் சல்மான் நடிக்கும் 'ஐ அம் கேம்' படத்தை 'ஆர்டிஎக்ஸ்' நஹாஸ் ஹிதாயத் இயக்கியுள்ளார். இதில் கயாது லோஹர், ஆண்டனி வர்கீஸ், மிஷ்கின், சம்யுக்தா விஸ்வநாதன் உள்ளிட்ட பலர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். துல்கர் சல்மானின் 40–வது அதிரடி த்ரில்லர் திரைப்படமான இதை, அவருடைய வேஃபரர் பிலிம்ஸ் மெகா பட்ஜெட்டில் தயாரித்துள்ளது. இப்படத்தின் டிரெய்லர் வெளியாகி வரவேற்பைப் பெற்று வருகிறது. இதுவரை இல்லாத அளவுக்கு அதிரடி நிறைந்த, ஸ்டைலான கதாபாத்திரத்தில் துல்கர் சல்மான் வருகிறார்.

சூதாட்டம், பழிவாங்குதல், குற்ற உலகம் மற்றும் பரபரப்பான ஆக் ஷன் காட்சிகள் நிறைந்த டிரெய்லர், கவனத்தை ஈர்த்துள்ளது. 100–க்கும் மேற்பட்ட இடங்களில் படமாக்கப்பட்டுள்ள இப்படம், தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், இந்தி மொழிகளில் ஆக.20–ல் வெளியாகவுள்ளது.

# துப்பாக்கி' வில்லன் ஹாலிவுட்டில்!




'துப்பாக்கி', 'மதராஸி' படங்களில் வில்லனாக நடித்த வித்யுத் ஜம்வால், 'Street Fighter' ஹாலிவுட் படத்தில் குரு தல்சிம் கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். 1993 பின்னணியில் உருவாகியுள்ள இந்த வீடியோ கேம் படத்தின் ட்ரெய்லர் வெளியாகி ரசிகர்களின் கவனத்தை ஈர்த்துள்ளது. இந்தியாவில் படம் அக்டோபர் 16, 2026 அன்று வெளியாகிறது.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020